
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1264

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

காலாண்டு வினாத்தாள்

## த.வெ.க. தொடக்கப்பள்ளி

பதிவு எண்

# SUBJECT: BLAST BLAST

பாடத்திட்ட வடிவமைப்புக் குழுவில் அனந்தஜித், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் 'லயோலா' மணிகண்டன் – 'காக்கா பிரியாணி தின்னா, உன்னிகிருஷ்ணன் வாய்ஸா வரும்?' என்பதைப் போல் விஜய் அரசில் இதெல்லாம் ஆச்சரியமில்லை. இனி, தேர்வுகளில் இப்படிக்கூட வினாத்தாள்கள் இருக்கலாம்.

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

**1 முதலமைச்சர் விஜய்க்குப் பிடித்த உயிரினம் எது?**

அ) குருவி ☐ ஆ) சுறா ☐
இ) ஹைனா ☐ ஈ) குதிரை ☐

**2 பிறந்தநாள் அன்று கேக் வெட்டுவதற்கு உகந்த நேரம் எது?**

அ) காலை 8.00 ☐ ஆ) நள்ளிரவு 12.00 ☐
இ) மாலை 5.00 ☐ ஈ) அதிகாலை 4.00 ☐

**3 'ஜனநாயகன்' ரிலீஸ் அன்று விஜய் கட்–அவுட்டுக்கு முதலில் பாலாபிஷேகம் செய்யப்போவது யார்?**

அ) மாணிக்கம் தாகூர் ☐ ஆ) வைகோ ☐
இ) துரை வைகோ ☐ ஈ) பத்திரிகையாளர் சபீர் அகமது ☐

### II. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதவும்

**4 84 என்ற எண்ணை, அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் எப்படி உச்சரிப்பார்?**

**5 தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா இதுவரை எத்தனை ரீல்ஸ் போட்டிருப்பார்?**

**6 'முறுக்கு இத்தனாம் தேதியில்தான் சுடப்பட்டது' என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அறிவியல்பூர்வமாக விளக்கவும்.**

**7 அமைச்சர் ஸ்ரீநாத்திடம் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டால், அவர் என்ன பதில் சொல்வார்?**

அ) 'என்ன, சரோஜா சௌக்கியமா?'
ஆ) 'எனக்கு எதுவும் தெரியாது.'
இ) 'யெஸ், கமென்ட்ஸ்'
ஈ) 'நோ கமென்ட்ஸ்'

### III) பொருத்துக

**8 பின்வரும் வசனத்துக்கு சொந்தக்காரர் யார்?**



அ) முகத்தை மூடு
ஆ) வாஷிங் மெஷின்
இ) வாடி வாடி கை படாத சி.டி
ஈ) கையோடு கத்தரிக்கோல்

### IV. ஒரு வரியில் விடை எழுதுக

**9 'வாயில நல்லா வருது' விளக்குக?**

**10 'இட்டுனு போய் இட்டுனு வருவது' என்றால் என்ன?**

**11 சிக்கிம், பூடான், கேரளா ஆகிய மாநிலங்களில் விற்கப்படும் பொருள் எது?**

### V. 10 வரிகளுக்கு மிகாமல் விடை எழுதவும்

**12 தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் 'லயோலா' மணிகண்டன் பாணியில் கீழ்க்கண்ட பாடல் வரிகளை விளக்குக**

அ) என்னாத்த சொல்வேனுங்கோ...
ஆ) டாடி, மம்மி வீட்டில் இல்லை...
இ) என் செல்லப்பேரு ஆப்பிள்...
ஈ) வாடா மாப்பிள்ளே...

### VII படம் வரைந்து விளக்கவும்

**13 செல்போனை வைத்து மாத்திரையைப் பொடி செய்வது எப்படி?**

**14 அணில் படம் வரையவும்**




## குற்றச் செயல்களில் முதலிடம்! முதலீட்டில் மூன்றாம் இடம்!

தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில், முதலிடத்தில் இருந்த தமிழ்நாடு, கடந்த 60 நாட்களின் தரவுகள்படி, மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, முதலீடுகளை ஈர்ப்பதில் முதலிடத்துக்கு வந்தது தமிழ்நாடு. ஆனால் தற்போது, 3–வது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆனால், இந்த இரண்டு மாதங்களில் த.வெ.க. நிர்வாகிகள்மீது எழுந்துள்ள பாலியல், மோசடிக் குற்றச்சாட்டுகளில் முதலிடத்தைப் பிடித்துவிட்டனர்.

சொந்தக் கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவரே, திருவைகுண்டம் எம்.எல்.ஏ. மீது கூட்டுப்பாலியல் வன்கொடுமை குற்றம் சாட்டினார். ஆனால், குற்றவாளிகளுக்கு ஆதரவாகக் குற்றச்சாட்டு வைத்த பெண்ணையே கட்சியை விட்டு நீக்கினர்.

அரசு வழக்கறிஞர் நியமனத்தில், ஒரு நியமனத்துக்கு 30 இலட்சம் ரூபாய் வரை வாங்கினார்கள் என்று ஆதாரங்களுடன் கட்சி நிர்வாகியே உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால், புகாரளித்தவரையே கட்சியை விட்டு நீக்குகின்றனர்.

3 மாதங்களில் 5 லாக்–அப் படுகொலைகள், பழனியில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் மோசடியாகப் பத்திரப்பதிவு, ஒப்பந்தக்காரரிடம் ரூ.1.30 இலட்சம் லஞ்சம், ஒப்பந்த அடிப் படையில் தூய்மைப்பணிகள் செய்ய நெருக்கடி, அம்பேத்கர் சிலையைத் திறக்கச் சொன்ன மக்களுக்குத் தடியடி, கடலூரில் 40 ஆண்டுகளாக வசித்துவந்த பட்டியலின மக்களின் வீடுகள் இடிப்பு, தினம் தினம் த.வெ.க. நிர்வாகிகள்மீது பதிவு செய்யப்படும் பாலியல் அத்துமீறல் வழக்குகள் எனத் தமிழ்நாடு பின்னோக்கி வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதியின் படையில்...



பி.பாலசந்தர்

2012–ஆம் ஆண்டில், சேப்பாக்கம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டபோது, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபோது, எடுத்துக் கொண்ட புகைப்படம். பள்ளிக்காலத்தில் இருந்தே கழகத்தின்மீது தீராத ஈடுபாடு. 2012–ஆம் ஆண்டில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனபோது, ராணுவப் படையில் சேர்ந்ததுபோலவே உணரவைத்தது.

– பி.பாலசந்தர், சேப்பாக்கம்,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,
சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கிளைச் செயலாளர் ஒப்புதல்!

1957–ஆம் ஆண்டு டிசம்பர் 27 மற்றும் 28 தேதிகளில், 'நாஞ்சில் மாவட்ட 3-வது மாநாடு' நாகர்கோவிலில் நடத்தத் திட்டமிடப்பட்டது. முன்னதாக நவம்பர் மாதம், 'திராவிட நாடு' வெளியிட்ட அறிவிப்பில், தொண்டர் படையில் பணியாற்ற விரும்பும் கழகத்தினருக்கு அழைப்பு விடுத்தது. பணியாற்ற விரும்பும் தோழர்கள் அந்தந்த கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பமிட்ட ஒப்புதலுடன் தொண்டர் படைத் தலைவருக்குக் கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900